புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 18. TML1157 - திருநங்கைகளின் பால் மாற்றுச் சடங்கு முறை: முழுப் பெண்ணாக மாறுதல்

ப.காவியா,
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர்.
திருள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்.

முனைவர் ம. சரளாதேவி,
ஆய்வு நெறியாளர் மற்றும் உதவிப் பேராசிரியர் (சுழற்சி–2),
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),
திருப்பத்தூர்.

## முன்னுரை

பரந்த இவ்வுலகில் ஒவ்வொரு உயிருக்கும், தனக்கும், தன் மன உணர்வுக்கும் ஏற்ற வாழ்க்கை வாழ்வதற்கான முழு உரிமையும், சுதந்திரமும் உண்டு. ஆனால் ஒவ்வொருவரையும் வடிவமைக்கும் பொறுப்பு குரோமோசோம்களைச் சார்ந்தது. குரோமோசோம்களின் எண்ணிக்கை இருக்க வேண்டிய அளவில் சரியாக இருந்தால் பொதுவான பால் பாகுபாட்டிற்கு வழிவகுக்கும். அவைகளின் எண்ணிக்கை கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ இருந்தால் அந்தப் பிறப்பானது திருநங்கை பிறப்பாகிறது.

குரோமோசோம்களின் அளவு சரியாக இருந்தும் பெண்ணாகப் பிறந்தவர் ஆணாகவும் ஆணாகப் பிறந்தவர் பெண்ணாகவும் மாறிக்கொண்டால் அவர்களும் திருநங்கைகள் தான். அவர்களுக்கு மனதளவில் மாற்றம் ஏற்பட்டாலும் உடல் ரீதியாக மாறுவதில்லை. அதனால் அறுவைச் சிகிச்சை செய்து கொள்கின்றனர். பழங்காலத்தில் வாழ்ந்த திருநங்கைகள் தாயம்மா முறையில் தான் அறுவைச் சிகிச்சை செய்து வந்துள்ளனர்.

காலங்களின் மாறுதலுக்கு ஏற்ப அறுவைச் சிகிச்சையின் முறையும் மாறியது. திருநங்கைகள் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டபின் பால் மாற்றுச்சடங்கு முறையை செய்வார்கள். இந்தச் சடங்கு முறையானது சற்று வித்தியாசமாக இருக்கும். என்னதான் திருநங்கைகள் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டாலும் பால் மாற்றுச் சடங்கிற்காக ஏங்குவார்கள். இந்தச் சடங்கு முடிந்தப் பிறகுதான் தன்னை ஒரு முழுப்பெண்ணாக (திருநங்கையாக) ஏற்றுக்கொள்கின்றனர். எனவே திருநங்கைகளின் பால்மாற்று அறுவைச் சிகிச்சை முறையை எடுத்துரைக்கும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

## பழங்காலத்தில் ஆணுறுப்பை நீக்கிய முறைகள்

பண்டையக் காலத்தில் ஆணுறுப்பை நீக்குவதற்கு திருநங்கைகள் பல முறைகளைக் கையாண்டு வந்துள்ளனர். பனை மரத்தின் ஓலையை வைத்து ஆணுறுப்பை நீக்குவார்கள். நூலினை வைத்து ஆணுறுப்பைக் கட்டிவிட்டு நீண்ட நேரம் நடக்கச் சொல்லி அந்த இடம் மறுத்துப் போகும் வரையில் நடப்பார்கள், பிறகு ஆணுறுப்பை நீக்குவார்கள்.

ஆனால் இந்தத் தாயம்மா முறை அனைவருக்கும் எளிதில் அமைவதில்லை. சிலர் வலியைத் தாங்கிக் கொள்ள முடியாமல் இறந்து விடுகிறார்கள். யாருக்கும் தெரியாமல் இறந்தவர்களை அடக்கம் செய்து விடுவர். சில பேருக்கு சிறுநீர் வரும் இடமானது அடைத்துக் கொள்ளும். அதனால், பல திருநங்கைகள் இறந்து விடுகிறார்கள். 100 சதவீதத்தில் 20% திருநங்கைகள் மட்டுமே தாயம்மா ஆப்ரேஷன் முறையில் உயிர் பிழைக்கின்றனர். அவர்களுக்குள் இருக்கும் பெண் ஆசைக்கு இவ்வளவு வேதனைகளைத் தாங்கிக் கொள்ள வேண்டும்.

## திருநங்கைகளின் மனநிலை

தனக்கான உடல் வேண்டும் என அனைத்துத் திருநங்கைகளும் தவம் இருப்பது பால் மாற்றுச் சடங் கிற்காகத் தான். உடலில் பிடிக்காத ஆணுறுப்பை அகற்றும் பால் மாற்றுச் சடங்கு நிர்வாணம் எனப்படும். ஆணின் அடையாளத்தைச் சுமையாகக் கருதுகிறார்கள். அனைத்திற்கும் மனதுதான் காரணம். சில திருநங்கைகள் அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதில்லை. காரணம், “அறுத்தாலும் பொட்ட தான் அறுக்கலைனாலும் பொட்ட தான்” என நினைத்துத் தங்களுடைய வாழ்க்கையை வாழ்கின்றனர்.

### பால் மாற்று அறுவைச் சிகிச்சை முறை

*ஆணுறுப்பை நீக்கிய பிறகு திருநங்கைகளுக்கு இரவில் நடக்கும் சடங்கு முறையே பால்மாற்று அறுவைச் சிகிச்சை முறையாகும். இதன் பிறகே திருநங்கைகள் தங்களை முழுப் பெண்ணாக உணர்கின்றனர். இந்தச் சடங்கானது இரவில் மட்டுமே நடக்கும். ஆண்கள் யாரும் வர மாட்டார்கள். திருநங்கைகளின் குலதெய்வம் சந்தோஷி மாத்தா ஆகும். இந்தத் தெய்வமே அவர்களுக்கு இஷ்ட தெய்வம், மறு பிறப்பு கொடுக்கும் தெய்வம் ஆகும்.*

*சந்தோஷி மாத்தாவின் உருவப்படத்தை வைத்து அலங்காரம் செய்வார்கள். பழங்கள், உணவுப் பண்டங்கள் அனைத்தையும் படையல் போடுவர். அறுவைச் சிகிச்சை செய்து வந்த திருநங்கையை வீட்டின் ஓரத்தில் அமர வைப்பார்கள். சுற்றுப்புறத்தில் உள்ள அனைத்துத் திருநங்கைகளும் அந்தச்சடங்கில் கலந்து கொள்வர். முதலில் சீயக்காய், மஞ்சள், மெஹந்தி போன்றவற்றை ஒவ்வொன்றாக தலை, முகம், கை கால்களுக்குப் பூசுவார்கள். ஒரு பெண்ணிற்கு திருமணம் என்றால் புடவை எடுப்பர். அதுபோல திருநங்கைகள் சடங்கிற்காக பச்சை புடவை கட்டுவர். அனைத்து ஆபரணங்களையும் பச்சை நிறத்தில் பயன்படுத்துவர். இதுவே சந்தோஷி மாத்தா கடவுளுக்கு நன்றி கூறுவதாக எல்லாத் திருநங்கைகளும் நம்புகின்றனர். அன்று அனைவரும் ஆடிப் பாடி சந்தோஷமாக இருப்பார்கள்.*

*விடியற்காலை 4 மணி அளவில் கடவுளுக்கு பூஜை நடக்கும். மாத்தா கடவுளுக்கு எதிரில் பால்குடம் வைத்திருப்பர். மூத்த திருநங்கை ஒருவர் இவருக்கு மாலை போடுவது, காலில் மெட்டி, மூக்குத்தி, நகை போன்றவற்றை அணிவிப்பர்.கண்களுக்கு மை வைப்பர். பிறகு பச்சைப் புடவை கட்டிக்கொண்டு புடவை முந்தானையில் முகத்தை மூடி விடுவார்கள். பால் குடத்தைத் தலையில் ஏற்றி நடப்பர். கண்களை எக்காரணம் கொண்டும் திறக்கவே கூடாது. வழியில் எந்தத் தடங்கல் வந்தாலும் கண்களைத் திறக்க மாட்டார்கள். ஏனென்றால் அப்போதுதான் முழுப் பெண்ணாக மாற முடியும். இது அவர்களுடைய நம்பிக்கை. பால் குடத்தைத் தலையில் ஏற்றி நடக்கும் வழியில் மற்ற திருநங்கைகள் திருஷ்டி கழிப்பர். ஓடும் நீரில் பால் குடத்தை ஊற்றுவர். அதாவது அருகில் உள்ள கடல், ஆறு, ஏரி எதுவாகவும் இருக்கலாம். இத்தனை காலமாக அவர்கள் பட்ட கஷ்டங்கள் நீங்குமாறு மாத்தாவை வணங்கிக் கொண்டே மனதிற்குள் நன்றி சொல்வர்.*

*கடல் மாத்தாவிடம் முதலில் மூன்று முறை முகத்தைக் காட்ட வேண்டும். பிறகு ஏதாவது மூன்று விஷயத்தைக் கைத்தட்டியோ அல்லது சத்தம் போட்டு அழைத்தோ மாத்தாவிடம் கேட்கலாம். பிறகு மீண்டும் முகத்தை மூடி விடுவர். தலையில் உள்ள பால் குடத்தைப் பின்புறமாக நின்று மூன்று முறை ஊற்றுவர். மடியில் உள்ள தேங்காயைக் கீழே போட்டு விடுவார்கள். பச்சை மரம், கருப்பு நாய் இந்த இரண்டினை அவர்கள் பார்க்க வேண்டும். நாயிடம் சென்று ஆணுறுப்பை அறுத்த இடத்தையும் முகத்தையும் மூன்று முறை காட்ட வேண்டும். அதேபோலப் பச்சை மரத்திடமும் மூன்று முறை முகத்தைக் காட்ட வேண்டும். மீண்டும் கண்களை மூடி விடுவர். வீட்டிற்கு வந்தவுடன் மாத்தா கடவுளை அனைத்துத் திருநங்கைகளும் பூஜை செய்து வணங்குவார்கள்.*


*முதன்முதலில் அப்போதுதான் மாத்தா கடவுளை ஆணுறுப்பை நீக்கிய திருநங்கை பார்ப்பர். அதுவும் நேரடியாகப் பார்க்கக் கூடாது. எதிர்ப்புறமாகக் கண்ணாடி மூலம் முதலில் மாத்தா கடவுளை காண்பிக்க வைப்பர். மீண்டும் கண்களை மூடிக்கொள்வார்கள். பிறகு தனக்குப் பிடித்த மூன்று நபர்கள் யாரையாவது அடுத்தடுத்து பார்க்கலாம். இறுதியாக கண்களைத் திறந்து அனைவரையுமே பார்க்கச் சொல்வார்கள். இவர்கள் வாழ்க்கையில் சாதித்த முதல் வெற்றியே இதுதான். இத்தனை வருடங்கள் பட்ட கஷ்டத்தை மறந்து நிம்மதி அடைகின்றனர். முழுமையான திருநங்கையாக மாறிய போது பெண்மைக்கான அத்தனை அறிகுறிகளும் வருகின்றன. பிறகு பெண் தன்மையிலேயே தன்னை நினைத்து வாழ்க்கையை வாழ்வர்.*

### சந்தோஷி மாத்தா வரலாறு

*சந்தோஷி மாத்தா கோவில் குஜராத் அகமதாபாத்தில் உள்ளது. திருநங்கைகளுக்கு அழகு மற்றும் மறுஉயிர் கொடுக்கும் தெய்வமாகும்.*

*ஒரு ஊரில் ராஜா, ராணி வாழ்ந்து வருகின்றனர். பக்கத்து நாட்டில் உள்ள இளவரசனுக்கு இந்த ராஜா தன்னுடைய மகளைத் திருமணம் செய்து வைக்கிறார். ஆனால் இளவரசிக்கு இல்லற வாழ்க்கையில் விருப்பம் இல்லை. அதனால் தன்னுடைய தம்பியிடம் எனக்கு இந்த வாழ்க்கை பிடிக்கவில்லை என்று கூறுகிறாள்.*

*அவனுடைய தம்பி நீ எதுவும் கவலைப்படாதே உன்னுடைய அறைக்குள் செல், நான் பார்த்துக் கொள்கிறேன் என்று கூறினான். பெண்ணாக வேடம் போட்டுக் கொண்டு இளவரசன் அறைக்குள் இவன் செல்கிறான். இரவு முழுவதும் அவருடனே இருந்தான். காலையில் இவள் என்னுடைய மனைவி இல்லை என்று இளவரசன் கண்டுபிடித்துவிட்டான்.*



படம். 01: சந்தோஷி மாத்தா– திருநங்கைகளுக்கு அழகு தரும் தெய்வம், மறு உயிர் கொடுக்கும் தெய்வம்.

கோபத்துடன் யார் நீ? என்று கேள்வி கேட்டு கத்தியை எடுத்து அவனை வெட்டுவதற்குத் தூக்கிச் சென்றான். உடனே அவன் உயிருக்கு பயந்து காளியம்மாவை வேண்டினான். என்னுடைய உயிரைக் காப்பாற்றுங்கள் என்று அருகில் உள்ள குளத்தில் குதித்தான். சிறிது நேரம் கழித்து அழகிய பெண்ணாக மாறி வெளியே வந்தான். அவனுக்கு அருகில் ஒரு சேவல் இருந்தது. அதை நீ வாகனமாகப் பயன்படுத்தி அனைத்து உயிரையும் காக்க வேண்டும் எனக் கூறியது. உடனே அங்கு வந்த திருநங்கைகள் அந்த அம்மாவை வணங்கி வழிபட்டனர். எங்களுடைய வாழ்க்கையை நாங்கள் எப்படி வாழ்வது என சந்தோஷி மாத்தாவிடம் முறையிட்டனர். அதற்கு அவர்களிடம் என்னுடைய ஆசகம் பெற்று உங்களுடைய வாழ்க்கையை நடத்துங்கள் எனக் கூறியது. அடுத்தவரை வாழ்த்தி நீங்கள் வாழுங்கள் என்று சந்தோஷி மாத்தா அந்த திருநங்கைகளிடம் கூறியது.

அதனால் தான் அனைத்து திருநங்கைகளும் பிறரை மனதார வாழ்த்துவார்கள்.

**முடிவுரை**

ஒரு பெண் என்றாலே பல்வேறு விதமான கட்டுப்பாடுகள், ஏளனப் பேச்சு, அடிமைத்தனம் இந்தச் சமூகத்தில் இருக்கின்றன. இதே திருநங்கைகள் என்றால் வேறு விதமான பார்வை காணப்படும். இந்தச் சமூக ஊடகங்கள் கூட இவர்களை கேலி கிண்டலுடன் மட்டுமே காண்பிக்கிறது. இது முற்றிலும் மாற வேண்டும். இவர்களையும் சக மனிதர்களாக இந்தச் சமூகம் ஏற்றுக்கொள்ள வேண்டும். வாழ்வதற்கே பல சிக்கல்களை திருநங்கைகள் தினம் தினமும் அனுபவிக்கின்றனர்.

இவர்களுடைய உணர்வுகள் மதிக்கப்பட வேண்டும். பண்டைக்காலத்தில் இருந்தே இந்த பால் மாற்றுச் சடங்கு முறை நடைபெற்று வருகிறது. காலங்களின் மாறுதலுக்கு ஏற்ப ஒரு சில பழக்கவழக்கங்கள் மாறி புதியதாக சேர்கின்றது. திருநங்கைகள் தன்னை முழுப் பெண்ணாக நினைத்து வாழ்வதற்கு பால்மாற்றுச் சடங்குகள் செய்து வருகின்றனர் என்பதை இக்கட்டுரை உணர்த்துகிறது.

**துணைநூற் பட்டியல்:**


1. சூ.ம.செயசீலன், திருநங்கைகளின் வாழ்வியல் இறையியல், வைகறை பதிப்பகம், சென்னை.
2. பிரியாபாபு, மூன்றாம் பாலின் முகம், சந்தியா பதிப்பகம், சென்னை.
3. கயல்விழி, 27, திருப்பத்தூர்.